சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: 1889 விரோதி வருடு ஆவணி மீ 28-ஆம் உ

இலங்கையிற் செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. பதிவு இல - 2.

பிரதி விலை: ரூபா 2-00

# இந்து சாதனம்
சிவமயம்
(HINDU ORGAN)

புத் - 101 | யாழ்ப்பாணம்:- பிரமோதூத வருடு சித்திரை மீ 28 உ (11 05 - 1990) | இதழ் - 13.

RECEIVED 1990 - 8 Library

# சைவ சமயச் சான்றோர் சங்கம்

## மயிலங்கூடலூர் மக்கள் மனப் பண்பு மலர்ச்சி

## இலக்கண வித்தகருக்குச் சித்தாந்த வித்தகர் தலைமையிற் பன்முகப் பாராட்டு

சித்திரை இருபத்தெட்டாம் நாள் (இன்று) அதிகாலை மயிலங்கூடல் ஞான வைரவர் தேவத்தான நவோத்தர சத சகஸ்ர சங்காபிஷகம் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ மு.பரமசுவாமிக்குருக்கள் தலைமையிலே தேவத்தான குரு சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள் நெறியாளராக நியம நீர்மையுடன நிகழ்ந்த பின் முற்காலத் தொன்மைச் சால்பினை நினைவூட்டும் விசேடம் ஒன்று நடைபெற்றது.

கோயில் முகப்பில் குழுமிய சைவசமயிகள் நல்லை ஆதீன பரமாசார்ய சுவாமிகளையும், சித்தாந்தக வித்தகர் மு ஞானப்பிரகாசம் அவர்களையும் இலக்கண வித்தகர் இ.நமசிவாயம் அவர்களையும் அவரது பாரியாரையும் பூரண கும்பம் பட்டுக் குடை ஆலவட்டம் வரிசையுடன் வரவேற்ற காட்சி சிறப்பபசமாயிருந்தது.

ஆலய பரிபாலனசபையினர் தலைவர் திரு க.குட்டித்தம்பி செயலாளர் திரு வ. சிதம்பரநாதன் சான்றோர்களின் பாதங்களிலே நீர் தெளித்து உபசரித்தமை பண்பின் சீராவமைந்தது.

ஞானவைரவசுவாமிக்குத் தீபாரதனை முடிந்ததும் பெரியோர்கள் மங்கள விளக்கேற்றினர்.

சிவஸ்ரீ ப. சண்முகானந்தக் குருக்கள் திருமறை ஓதியதும் திரு க. குட்டித்தம்பி திருமுறை ஓதினர்.

கல்விக் கழக அதிபர் சி. அப்புத்துரை அவர்கள் மேன்மைகொள் சைவ நீதி விளங்க இவ்வுலகில் இந்நிகழ்ச்சியிற் கலந்து கொண்டிருக்கும் அபிமானிகள் அனைவரையும் வரவேற்கிறோம் என்று கூறித் தலைவரையும் பண்டிதர் நமசிவாயம் தம்பதிகளையும் விசேடித்து வரவேற்றனர்.

நல்லை ஆதீனம் பரமாசார்ய சுவாமிகள் இலக்கண வித்தகருக்குப் பொன்னாடை

( வளர்ச்சி 4 ஆம் பக்கம்)

## வண்புவி வாழ்த்தும் மகிழ்ந்து

ஆண்டொரு நூற்றுக்கு மப்பால் வயதிரண்டு
பூண்டொளி வீசு புகழ்மேவத் — தூண்டுளப்
பண்புமலர் சைவ பரிபால னச்சபையை
வண்புவி வாழ்த்தும் மகிழ்ந்து.

'இறை - ஒளி'

## சீசெல்சு நாட்டில் பிள்ளையார் கோயில்

### கால்கோள் விழா தகைசால் நெறியாய்த் திகழ்ந்தது

இந்து மகா சமுத்திரத்தின் மேற்குக் கரையில், அள்ளித் தெளித்த முத்துக்கள் போல் ஜொலிப்பது சீசெல்சு நாடு. கருங் கற்களாலும் பவ



ளங்களாலும் ஆன சுமார் எண்பத்தொன்பது தீவுகளைக் கொண்ட சீசெல்சு அண்மையில் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்ற மொரீசியஸ் தீவுக்கு வடபால் உள்ளது. இது விடு முறைகளைக் கழிக்கும் உல்லாசப் பயணிகளின் நாடாக விளங்குகின்றது.

இங்கு ஆபிரிக்கர்கள், இந்தியர்கள், சீனர்கள், மேலை நாட்டவர்கள் எனப் பல இன மக்கள் வசிக்கின்றார்கள். தேசிய மொழி ஆங்கிலம், ஆனால் பெரும்பான்மையினர் இரயோல்என்னும் மொழி பேசுகின்றார்கள்.

திரை கடல் ஓடியும் திரவியந் தேடப் புகுந்த இந்திய மக்கள் இங்கும் குடியேறினார்கள். தங்கள் பண்பாடு, கலை கலாசாரம் மொழி, சமயம் என்பவற்றையும் இங்கு வளர்த்து வருகின்றார்கள். அண்மையில் ஏற்பட்ட சமய விழிப்புணர்ச்சியின் பயனாக "இந்துக்கோயில் சங்கம்" உருவாகியது. தலை நகரிலே திருக்கோயில் எழுப்ப நிலம் வாங்கினார்கள். நடன நிகழ்ச்சிகள், கலை விழாக்கள், நன்கொடைகள் மூலம் நிதிசேர்த்து பிள்ளையார் கோயில்கட்ட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

"திருவோடு காய்க்கின்ற திருநாடு' என்ற பெயர் பெற்ற சீசெல்சு நாட்டில், இந்துக்களுக்கெனத் தனிப் பெரும் கோயில் இல்லாத குறை

( வளர்ச்சி 4 ம் பக்கம் )

## சிவ சமயம் காட்டும் அறிவியல் விஞ்ஞான உண்மைகள் (II)

"எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப
தறிவு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய மெய்யான பொருளை அறியவேண்டும், இதற்கு சிந்தனை நல்லது வேண்டும், ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் சிந்தனையே அடிப்படையாக அமைகின்றது ஆகவே நாம் சிறப்பாக வாழ எமது சிந்தனை நற்சிந்தனையாக உருவெடுக்கவேண்டும். இவ்வகையில் எமது உள்ளங்களிலிருந்து நற்சிந்தனையை பெருக்கெடுத்தோடச் செய்யும் முகமாக சைவ நெறி, 'அக்குபங்ஷர்' மருத்துவம், உளவியல் மருத்துவம் ஆகியவற்றிற்கிடையிலான ஆய்விற்குரிய தொடர்புகளை முன்னர் இவ்விதழில் ஆராய்ந்தோம். மேலும் சைவ சமய நெறிக்கும் அறிவியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான தொடர்புகளை ஆராய்வோமாக.

சைவ சமயிகள் பன்னெடுங் காலமாக விரதம் அனுஷ்டிப்பது வழக்கம். விரதம அனுஷ்டிக்கும்போது உணவைக் குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல், மனத்தால் இறைவனை சிந்தித்தல், உடம்பால் இறைபணி செய்தல், இறை நாமம் ஓதுதல். அதாவது சிந்தனை, சொல், செயல் மூன்றும் இறை நெறியிலே இருக்கக் காண்கின்றோம் விரத காலங்களில் உணவைக் குறைப்பதனாற் குருதியில் இருக்கும் கொலஸ்திரோலின் அளவு குறைகின்றது. இதனால் இரத்த அழுத்தம் இதய நோய்கள் ஏற்படாது சீராக்கப்படுகின்றது மற்றும் விரதகாலங்களில் இறை சிந்தனையில் இருப்பதால் கவலைகளும் துன்பங்களும் மறக்கப்பட்டுச், சிந்தனைகள் நற்சிந்தனையக்கப்பட்டு உளவியல் வகையிலான தாக்கங்கள் சீராக்கப்பட்டு நரம்பு, மூளை ஆகி

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

தெல்லியூர் வெற்றிவேல் சக்திவேல்

## உலகத் தமிழர் விழா!

குரும்பசிட்டி உலகத்தமிழர் ஆராய்ச்சி நிலயம் வழங்கும் மொறிசியஸ் தமிழர்தினம் சார்பாக வண்ணை வைத்தீஸ்வரர் வித்தியாலயத்திலே 20-5-1990 மாலை 3 மணிக்குக் கண்காட்சி ஆரம்பிக்கப்படும் என்று இந்நிலைய உயிர் நாடியாக உலகத் தமிழர் என்ற ஒப்பற்ற நிலைமைக்காக உழைத்து வரும் திரு இராசரத்தினம் அவர்கள் அறிவிக்கின்றனர்.

தமிழ்உலகம் தாரணியெங்கும் நிலவுக. ★

திருச்சிற்றம்பலம
வாழ்க அந்தணர் வானவ
ரானினம்
வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்,


**இந்து சாதனம்**

பிரமோதூத ஞூ சித்திரை மீ
(11 — 05 — 1990)


( இதய இராகம் )

## மெய் வருந்தக் கூலியான வெள்ளி விழா

மேளதாளம் சங்கீதம் குடை கொடி ஆலவட்டம் நிறை குடம் ஐம்பான் ஐந்து. இந்த வரிசையில் விமரிசையாக விளங்கியது தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் எடுத்த வெள்ளி விழா என்று சொல்லிப் பாராட்டுரைப்பதல்ல அக் குழுவினரின் முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு முறை.

இளைஞர்கள் தொடர்ந்து இருபத்தைந்தாண்டுகள் இயங்குவதும் இயல்பானதொன்றே.

எனின் இச் சங்கத்தினர் ஆற்றிய பணியின் பயன்தான் என்னவென்று கூர்ந்து நோக்க வேண்டியதே வாழ்த்துக் கூறுவோருக்கு உரிய வழி.

சமய சங்கங்கள் அமைகின்றன அநேகம். ஆனால் ஆலய நிழலில் அல்லது அருகில் இயங்கும் சைவ சங்கம் எவ்வகையிலும் ஏற்றமும் எழிலும் பெறும் பாக்கியமுடையதாகின்றது,

கோயிற் கற்றுடலிற் குடி கொண்டு விட்டால் மட்டும் போதாது, சங்கம் திருத்தலத்துக்கொரு பொருத்தமான அணியாக விளங்கவேண்டும்,

இச் சங்கத்தின் சாதனைகளை விளக்கிக் கூறும் வெள்ளிவிழா மலரில் வெளியாகும் பெருண்மை துர்க்கா தேவி ஆலயத் தொண்டர்களாக அயராது உழைத்து அங்கு நிறுவப்பெற்றிருக்கும் இராஜ கோபுரம். நுழைவாயில் முகப்பலங்காரம். தீர்த்தக் குளம் மணி மண்டபங்கள் அன்னதான சாலைகள் யாவற்றிற்கும் இந்த இளைஞர்களின் இயல் பூர்வமான உழவாரத்தொண்டும் ஓயா முயற்சியும் உதவின என்பதே.

'உடையர் எனப்படுவ
தூக்கம் அஃதிலார்
உடைய துடையரோ
மற்று''

ஆற்றலைத் தோற்றுவித்துச் செயலாற்றுதற்கு ஊக்கம் வேண்டும்.

அப்பர் அடியார் சைவசமயத் தொண்டில் அடியெடுத்து வைத்தது மூப்படைந்த காலத்தில். இளைஞர்கள் அப்பர் தொண்டாற்றும் அன்பர்களாயிருக்கின்றனர் என்றால் இது புண்ணியப் பொலிவுதான்.

இச் சங்கத்தினரை வாழ்த்திய இந்துசாதன ஆசிரியர் ''செயற்கரிய செய்வர் இளைஞர்'' என்று திருக்குறள் முது மொழியை மாற்றி அமைத்துக் குறிப்பிட்டிருக்கின்றார். இக் கருத்துப் பொருத்தமானதே.

செயற்கரிய தொண்டு எவ்வாறு அமைந்ததெனில்:—

சமய நெறியையே அடிப்படையாகக் கொண்டு பணி புரிதற்குத் துர்க்கா தேவத்தானத்திலே நியமமாக வழிபடுவது.

தேவிதலத்தில் நிகழும் விசேட நியமங்கள் விழாக்கள் யாவற்றிலும் இளந்தொண்டர்களாகத் தாமாகவே முன்வந்து கடமைஏற்றுப் பக்தத் தீபம் தாங்குதல் குடை, ஆலவட்டம் பிடித்தல், திருவுருவ உலாவிலே பீடத்தையோ வாகனத்தையோ தோள் கொடுத்துப் பணியாற்றுதல், ஆலயத்தைப் புனிதமாக வைப்பதற்கு அங்கே பெருக்குதல் நீரேற்றிக் கழுவுதல் என்றின்னன பலவற்றை இளைஞர்கள் தங்களுக்குள்ளே ஒழுங்கு முறை அமைத்து அன்புத் தொண்டு புரிந்துவருதல்.

நந்தநவனம் பேணுதலிலே சிறந்த பண்பு காட்டி ''தண் மலர்கள் தந்திடு நந்தநவனங்கள் இடையூறின்றிலாமல் வைத்து வளர்த்திடுதல்'' என்று சிவாகமச்சீலர்கள் சொல்லியவாறு பூந்தோட்டப் பணிபுரிதலிலே இந்து இளைஞர் சங்கம் தங்கள் சிந்தனைத் திறனைக் காட்டி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் நாம் எடுத்துச் சிறப்பித்துக் கூறுவது இந்துசமயத் தொண்டர்களுக்கு இச்சங்கங்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றதென்பதற்காகவே.

சங்கம் அமைத்துப் பிரசங்கம் நிகழ்த்துவதிலும் பிற பணிகளைப் புரிவதிலும் பயன் சிறிதே உழவாரத் தொண்டினால் எழும் நயம் பெரிதே.

இளைஞர்களை வழி நடத்தும் பொறுப்புடையவர்கள் பணி தூயதாகத் தொண்டின் நெறியமைந்ததாக இருத்தல் அன்றி இந்து சங்கங்களின் எழுச்சி உயர்ச்சியடையாது.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்துக்கு அவர்கள் ஒவ்வொருவரும் ''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே என்றுள்ளத் துவகை கொள்ளச் சிவாசாரியார்கள், பூசகர்கள், துர்க்கா தேவத்தான நிர்வாகத் தலைமைப் பீடத்தில் அருந்தொண்டாற்றும் அம்மையார்.

# தாயை ஊனாக உண்ணும் தனயர்களாகலாமா?

## ஆனினத்தை ஊன்இனத்தில் அணைப்பதா!

வேத நெறி தாழத் தோங்கவும், சைவம் நிலை பெற்று வளரவும், புனிதவாய் மலர்ந்தளுத ஞான வள்ளல். ஞான சம்பந்தர் தமது அருமறையாம் திருமுறையில்;—

''வாழ்க அந்தணர்
வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக'

என ஆனினத்தின் அருமையையும் பெருமையையும் விளக்கியுள்ளார்.

ஆனினமாகிய பசுக்களின் விருத்தியால்தான் ஆன்மாக்களின் ஈடேற்றம் உண்டென்பதைச் சைவச் சீலர்கள் நன்கு உணர்வார்கள். கோயில் என்றால் ஆலயம் எனவும், கோயில் என்றால் அரண்மனை (அரசன், கோன் உறையும் இடம்) எனவும், கோயில் என்றால் பசுக்கள் வதியும் இடம் (கோ — பசு, இல் வீடு) எனவும் ஒரு சொல் பல பொருட்களைக் குறிக்கும் புனிதச் சொல்லாக இருப்பதைக் காணக் கிடக்கின்றது. ஆகவே ஆன்மாக்கள் ஈடேற இறைவனும், அரசனும், பசுக்களும் வேண்டும் என்பதை நம் மனத்தில் இருத்த வேண்டும்.

பசுவின் பால் ஆலயங்களின் அபிடேகத்துக்கும் மக்கள் வாழ அரும்பொருளான அமிர்தமாகவும், பிணியாளர்களுக்கு மருந்தாகவும், குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் பால அமிர்தமாகவும் உபயோகிக்கப்படுவதை நாம் காணக் கிடக்கின்றது.

ஒரு குழந்தையின் தாய் குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டாலு தாய்க்குத் தாய் போலப் பாலமுதம் கொடுத்துக் குழந்தையை வளர்க்கும் தன்மையில் அமைந்தது பசுவாகிய (கோமாதா) தாயாகும். இப்படியாக மக்களுக்கு வாழ்வளிக்கும் பசுக்கூட்டங்களைப் போற்றிக் காக்க வேண்டியது நம் கடமையாகும்,

ஆன்மாக்களின் பாவங்களைப் பொடிபொடியாக்கி பாசமலம் வைக்கும் திருநீருகவும், பரம் பொருளின் பாதாரவிந்தங்களைப் பற்ற வைக்கும் அருமருந்தாகவுள்ள திருநீற்றாம் திருநீற்றைத் தருவதும் பசுவாகும். திருஞான சம்பந்தருக்கு ஞானப் பால் ஊட்டுவதற்கு சீர்காழியில் எழுந்தருளிய இறைவனும் இறைவியும் தோடுடைய செவியுடனும் மதியைப் புனைந்தும். சாம்பலைப் பூசியும் (நீறணிந்த திருமேனி) ஞானவள்ளலின் உள்ளத்



தைக் கொள்ளை கொள்ள வந்ததும் கோவிடை மேல் என்பதை ஞான வள்ளலின் தேவாரத்திலே தோடுடைய செவியன் விடை ஏறி ' என்னும் அடிகளால் நாம் முடிகின்றது, ஆகவே சைவ சமய சீலர்களுக்குப் பசு ஒரு தெய்வமாக வணங்

( சைவப் புலவர்,
சித்த வைத்திய கலாநிதி
க. சிற்றம்பலம்

கப்பட வேண்டியது என்பதை புராணங்கள் வேதங்கள், ஞானிகளின் வரலாறுகள் மூலம் பசுவின் பெருமையை நாம் காணக் கிடக்கின்றது.

பாற் கடலிற் பள்ளி கொள்ளும பரந்தாமனுக்கு கோபாலன் என்னும் புனித நாமம் வரக் காரணமாக அமைந்தது பசுவேயாகும். கோவினத்தைப் பாதுகாத்து, குன்றவிலா நிறைவை உலகுக்கு அளித்தவன் ஆனமையால் கோபாலன் எனக் காரண இடுகுறியான நாமம் கண்டோம். பசுக்களைப் பாதுகாக்கவே கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த வரலாறு பசுக்களின் பெருமையை உலகுக்கு உணர்த்துவான் பொருட்டாகும்.

பசுக்களின் ஒவ்வொரு உறுப்புக்களிலும் தேவர்கள் வாழ்கின்றார்கள் என்பதைப் புராணங்களும், அறிவுரைகளும் விளக்கி நிற்பதைச் சைவச் சீலர்கள் உணர்வார்கள்.

ஆண்டாண்டு தோறும் சைவச் சீலர்களால் கொண்டாடப்படும் சித்திரை மாதத்தில் வரும் சித்திராப் பூரணையில் கொண்டாடப்படும் சித்திரகுப் விரதத்தில் பசுவின் கதையின் மகத்துவத்தையும் தத்துவத்தையும் அதன் பெருமையையும் சித்திரைக் கதையில் நாம் கண்டும் கேட்டும், அறிந்தும் ஆராய்ந்தும், ஆன்ம ஈடேற்றம் பெறக் கூடியதாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

திருமூலர் வரலாற்றில் பசுவின் மகத்துவம் நன்கு புலப்படுவதைத் திருமந்திரம் தரக் காரணமாக அமைந்திருப்பது பசுவே எனக் காணக்கிடக்கின்றது. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானவள்ளல் ஞானப்பிரகாச முனிவர் வெள்ளைக்கார அதிகாரியின் கட்டளைப்படி, பசுமாடு இறைச்சிக்காக அனுப்பும் படி கேட்டபோது, பசுமாடல்ல பசுவின் மயிர்தானும் நான் கொடுக்க மாட்டேன் என்று உறுதியாக உரைத்துச் சிவதர்சனை செய்து, பசுவதை செய்யும் பாதகர்களைத் திட்டிபதுமல்லாமல் பசுவதை செய்பவர்களையும் பசுவதையும் பார்ப்பதற்குச் சகிக்க மாட்டாது, இரவோடு இரவாக சிதம்பரம் சென்று மடம் அமைத்து. தில்லையிலாடிய எல்லையிலா ஆனந்தத் தாண்டவனிடம் இச்செயலை இயம்புவான் போல தினமும் இறைவனின் பாதம் பணிந்து முத்தியடைந்தது மாத்திரமல்ல, இன்னும் பசுவதையால் ஏற்பட்ட செயலை மக்கள் உள்ளங்களில் நினைவு படுத்துவான் போல ஞானப்பிரகாசர் மடமும் திருக்குளமும் அமைந்திருப்பதை சிதம்பர தரிசனையாளர்களின் கண்களில் காட்சிதரும்.

பசுவின் இரத்தத்துளியில் ஒன்று பூமியில் விழுமாயின், அத்துளியிலிருந்து ஒரு கோடி அசுரர்கள் தோன்றி உல

( வளர்ச்சி 4 ம் பக்கம் )

# மங்கையர் மாண்பு

(முற்றொடர் - 3)

இந்து சாதன நங்கை அந்த மங்கையர் மாண்பு முன்னுரையைச் சென்ற இதழிலே தாங்கி நின்றாள். அதன் விரிவை இந்த இதழிற் கூறுவாம்.

ஏனைய பண்புசால் அடைமொழிகளுக்கு மேலாக இப்பெண் அடியாரைப் புலவர் எங்கள் தெய்வம் என்றும் தெய்வப்பாவையென்றும் ஆழ்ந்த நோக்குடன் கவிபாடியிருக்கின்றனர்.

எங்கள் என்று ஒரு புலவர் சீர்தொடுக்கும் பொழுது அவர் உலகம் முழுவதையும் கருதித்தாமும் அவ்வுலகினரில் ஒருவராகையால் எங்கள் என வியந்தனர் எனலாம். எங்கள் பிரான் என்று வருதலும் காண்க.

உலகம் என்னுங்கால் உயர்ந்தோர். உயர்தோர் இங்கே சைவ சமயச் சார்ந்தோரை எனப் பொருந்தும்.

தெய்வத்தன்மையிற் சிறந்த அம்சம் காவல் புரிவது. மங்கையர்க்கரசியார் சைவத் துறை விளங்கத் தூய திருநீற்றின் மகிமையைத் துலக்கிய நிகழ்ச்சியின் ஏதுவாக இருந்த வகையிலே சைவ நெறிகாக்கும் தொண்டினூற் சைவ உலகத்தைப் பேணும் பணி புரிந்தனர் எனச் சேக்கிழார் சுவாமிகள் கருதியதை உலகம் முழுவதுமே கருதுகிறது.

ஒப்பற்ற மங்கை இவர் திருமடந்தைக்கு ஒப்பாவர். "செங்கமலப் பொலந்தாதிற் நிகழ்ந்தார் தாளிரு மெழின் மேனித் திரு" வெனத் தோத்திரப் பாவில் வருகின்றது. ஞானம்பிகை வீற்றிருப்பதும் செங்கமலமே. எது வென்னும் பெருந்தும் பொருமையுடையது இவ்வருணனை.

நெடுமாறன் தடுமாறிச் சமண் படிந்து கெடுமாறு நின்றஞான்று பேதைமை விடுமாறு ஆளுடைய பிள்ளையார் அருட்டுணை பெறுமாறு தவங்கிடந்த மனைத்தக்காள் மங்கையர்க்கரசியார், மெய் வழி வந்த மாறனுக்குச் சைவ வழித் துணையின் பேற்றினைப் புலவர் போற்றுதல் காண்க.

மங்கை தன் கடன் தங்கணவனுக்கு உயிர் ஆவது. ஈருடல் ஓருயிர்ச் சிருடன் சிறந்தனர் மங்கையெனப் புலவர். சைவ வழித்துணையானதுமன்றி நெடுமாறனின் தெய்வழிப் பயணத்திலும் துணைபோயினர் என்ற கற்பின் பொற்பினை நயம் பெறக் காட்டிச் சுவை கூட்டியிருக்கின்றனர். தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவையின் மாண்புசால் வரலாறு பெண்மையைப் பற்றியும் கற்பின் திண்மையைச் சுற்றியும் அமைகிறது.

மங்கையர் தினவே மகிழ்ச்சி தரும் இவ்வேளையிலே அவ்வணியில் இவ்வுலக வாழ்வைத் தெய்வீக மாக்கத் திகழ்ந்த குரவர் நம்பி ஆரூரரை மகப்பேறாகத் திருவருள் பொலியப் பெற்ற இசை ஞானஅம்மையாரின் எண்ணம் குடிகொள்கின்றது.

சித்திரைச் சித்திரை - திருநாட் பேறுபெற்ற இந்த அம்மையாரை:

"ஒழியாப் பெருமைச் சடையனு ருரிமைச் செல்வத் திருமனையார் அழியாப் புரங்க ளெய்த்தழித்தாராண்டா நம்பிதனைப் பயந்தார் இழியாக் குலத்தி னிசை ஞானிப்

## சிவகங்கா கைலைநாயகி

பிராட்டியாரை யென்சிறுபுன் மொழியாற் புகழ முடியுமோ முடியா தெவர்க்கு முடியாதால்".

திருத்தொண்டர் புராணத்தில் இடம் பெற்ற அம்மையார் இவர் என்ன தொண்டாற்றினரென்றுஞ் சேக்கிழார் சுவாமிகள் எமைச் சிந்திக்க வைக்கச் செய்கிறார்.

'அழியாப் புரங்கள் எய்தழித்தார் (நம்பிஆரூரர்) தனைப்பயந்தார். தொண்டுக்கு தொண்டனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஈன்றெடுப்பது திருத்தொண்டாமென்றபடி.

அம்மையாரைப் பிராட்டி யென்றனர் புலவர் சுவாமிகள் தலைவி பாகத் திகழ்ந்தார் என்பு பொருள் பெறும். திருத்தொண்டுக்குத் தலைவியெனத் தருவித்துரைப்பது பொருந்தும்.

தொண்டுத்தாயார் இவரைத் தூயமொழியாற் போற்றும் சேக்கிழார் சுவாமிகள் ஒரே செய்யுளிலே திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளைத். தொண்டனும நம்பியாரூரரை. அக்குரவர் திருவவதாரஞ் செய்த தெய்வீகத் திருவாரூரரை; இல்லற நல்லார் சடையனாரை, அன்னாரின் திருமனையை மாணிக்க மணிக் கோவையாக மிக மகிழ்ந்து திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

இந்த அம்மையாரை எந்த நாவாலும் இயன்ற முறையிற் புகழ முடியாதென்கின்றார் புலவர்.

சடையனார் இசைஞானி அம்மையார் இறைவனால் அருள் பெற்ற மங்கல மனையினர் என்றும் அவ்வழி நம்பி ஆரூரன் மனைமாட்சியின் நன்லனும் மக்கட் பேற்றுக்கும் எடுத்துக் காட்டென்றும் சேக்கிழார் செந்தமிழ் கைவிட்டா இன்பத்தைக் கொடுத்த வண்ணம் பெறும் பொருள் விரிக்கின்றது.

தக்காரை யீன்ற தகையினரைச் செப்தவம் மிக்காரைப் போற்றல் விறல்.

"வனிதையார் மனது" என்று அடியெடுத்துச் சிவன் அடியார்களிலே மங்கை நல்லாரின் மாண்பு கூறும் வகையிலே பெண் இனத்தின் பெருந்தகைமை இயல்பாகவே தோன்றுவது இன்புறத் தக்கது.

திருத்தொண்டர் மாக்கதையிலே கூறக் கண்டா சமுகத்தில் "இளவளவெண் பிறை அணிந்தார்க்கேற்ற திருத்தொண்டெல்லாம், அளவில் புகழ் பெற விளக்கி அருள் பெருக அரசளித்த" நின்ற சீர் நெடுமாறநாயனார், சிவன் பெருகச் செங்கோல் உயத்து அறமளித்து சைவ நெறியாகு சிவநாமம் ஐந்தெழுத்தின் நெறிகாதது வரும் பெரும் பண்பிற் சைவ வழித்துணையாகத் திருவருளாலே வரத் மங்கையர்க்கரசியார் மாண்பு மன்னி யசீர்ச் சருகத்திலே தொடர்ந்து திருத் தொண்டத்தொகை அருட்பா தந்த குரவரின் தந்தையார் சடையனார் இசைஞானி அம்மையார் ஆம் தவத்தம்பதிகளின் வரலாறெலாம மருவ நின்றது இக்கட்டுரை.

கல்வித் திணைக்களம்

# சைவம் கற்பிக்கும் திட்டம்

அதிகாரி திரு. க மகேசன் அவர்கள் தரும் விளக்கம்

❁ செயற்றிட்டம் ❁ நோக்கம் ❁ செயற் கூறுகள்

முன்வளர்ச்சி - 4

## (10) பூந்தோட்டம் அமைத்தல்

1. பூசைக்கும் அலங்காரத்துக்கும் மாலைக்கும் தேவையான மலர்களைப் பெறுதல்
2; சைவ சமய பாரம்பரியத்தைக் கற்றுக் கொள்ளுதல்.
3, பயனுள்ள பொழுது போக்காகவும், உழைப்பாகவும் உருவாக்குதல்.

1, நிலத்தைத் தெரிதல்.
2, பூமர வகைகளை நிர்ணயித்தல்.
3, திட்டமிடுதல்.
4, பண்படுத்துதல்.
5, நாட்டுதல்,
6, பராமரித்தல்.
7, மலர்பறித்தல்.
8, பூசை செய்தல் மாலை கட்டுதல் முதலியன.

### செயற்றிட்டம்

1. செயற்றிட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் குழு அமைத்தல்
2. மேற்படி குழுவுக்குப் பயிற்சி அளித்தல் / பண
3. யோகாசனமும் தியானமும் பயிற்சி
4. ஆலயத் தொண்டு பயிற்சி
5. காலைக் கூட்ட ஒழுங்கு திட்டம் தயாரிப்பு
6. சைவ நெறித் தொண்டர் பயிற்சி

அதிபர்
கல்விஅதிகாரி
E.O சமயம்
E.O சங்கீதம்

அதிபர்
பெறுப்பாசிரியர்
E.O சமயம்
பொறுப்பாசிரியர்
கல்விஅதிகாரி
E.O சமயம்

#### உறுப்பினர்

சமயாசிரியர் சங்கீதம் காலைக் கூட்டம் பொறுப்பாளர்.

சமயப் பயிற்சி ஆசிரியர்
விசேட ஆசிரியர்
சமயாசிரியர்
சமயாசிரியர்.
பொறுப்பாளர்.

1) சைவநெறித் தொண்டர் கழகம் அமைத்தல்
1.1 கடமைகள் பகிர்ந்தளித்தல்.
1.2 பதிவேடுகளைப்பேணுதல்
1.3 மேற் பார்வை செய்தல்
1.4 பயிறசி.
2) காலைக் கூட்ட நிகழ்ச்சிகளை விளம்பரப் பலகையில் இடுதல்.
2.1 அழலாக்குதல்
3) யோகாசனமும் தியானமும்.
3.1 வகுப்பு வாரியான திட்டம் திட்டுதல்
3.2 உரிய ஆசிரியரை / பிறர் நியமித்தல்
4 பண்ணிசை வகுப்பு நடாத்துதல் சங்கீத மாணவருக்கு மட்டும்.
4.1 சங்கீத மாணவர் யாவரும் சேர்ந்து பாடுதல் தேவாரம் 1 புராணம் 1 ஏனையவர் கேட்டல்.
4.2 இருவகுப்பாகச் சேர்க்க
4.3 எல்லா மாணவரும் சேர்ந்து பாடுதல்.
5) சிவபூசை செய்தல் ஒரு குழு / வகுப்பு
5.1 தேவாரம் பாடுதல் ஒருவகுப்பு / ஏனையோர்
6) சிவாலயத் தொண்டு
6.1 நேரசூசி அமைத்தல்
6.2 ஊர்வலமாகத் திருமுறைப் பாராயணத்துடன்
6.3 கூட்டுப் பிரார்த்தனை ஊர்வலம் ஒழுங்கு செய்தல்
6.4 தீர்த்தக்கேணி முதலியவற்றைத் துப்பரவு செய்தல்
7) வீதி துப்பரவு செய்தல் ஆலயத்தில்.

(வளரும்)

## மகத்தான மறுமலர்ச்சி வைபவங்கள்

### தெல்லி. துர்க்கை மல்லை நீலியம்பன் திருத் தலங்கள்

மணவாளக்கோலமென்னும் மறுமலர்ச்சி வைபவங்கள் தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலயத்திலும் மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோயிலிலும் முறையே சித்திரை 22ம் நாள் சனிக்கிழமை 27ம் நாள் வியாழக்கிழமை சிவகாம விதிமுறை நெறி வழி பத்தர்கள் பரவசமடையும் வகையிலே சிவ சரியார்களால் நிகழ்த்தப் பெற்றன.

சங்காபிஷேகம் சர்வ மங்களமாகவும் உபயகாரர் உளம் உவகைஅடையவும் ஓதுவார் திருமுறை உள்ளம் தொடவும் சங்கொலியும் நாதசுர தாள கீதலயம் பொலியவும் இளந் தொண்டர்கள் வளர் திகழ் தொண்டு துலங்கவும் நடைபெற்ற மணவாளக்கோலத் திருவிழாக்கள் மக்கள் மதியில் மறுமலர்ச்சியாக ஊக்குவிக்கும் பான்மையுற்றிருந்தன.

## ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள்

### பரகதி அடைந்தனர்

இலங்கை மெய்கண்டான் ஆதீனம் ஞானப்பிரகாசதம்பிரான் சுவாமிகள் பரகதி அடைந்து விட்டதாகவும் யாகதீப பூசைக் கிரியைகள் 10-05-90 நிகழ்ந்ததாகவும் சுவாமிகளின் மக்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றனர்.

மெய்கண்டார் ஆதீனப் பிரசாரங்களைச் சுவாமிகள் பல வேறிடங்களில் நிகழ்த்திவந்திருக்கின்றனர்.

★ ஆலயத்தில் மணவாளக் கோலம் சால நிகழும் மறுமலர்ச்சிக் காலம் ★

# HINDU ORGAN

MAY 11. 5. 1990

## EDUCATION FOR EVERY BODY

Experience has revealed that systems for the education of a people will have to be changing according to the needs of a society consequent on the cropping up of new conditions of living.

From the monarchical mandates to the colonial order - in council, there be gan the first change in the matter of public instruction

With the Island's freedomfrom foreign yoke, the syllabus of studies for pupils came to be based on the outlook of the administrative Authority.

Ministers of Education, intent on creating an imprint on the minds of political partisans with their pet schemes, introduced new trends.

Minister C. W Kannangara made a mark for himself and his party with a spectacular innovation- Free Education. Whatever implications it may have had, it cannot be denied that it did definitely open a new chapter in the educational policy of this country.

But has this major inducement succeded? Is education being availed of by everybody?

The offer of free education, has been there; but the acceptance of it by all the people could not be realized.

Compulsory education, then becomes the only way to make a full success of free education.

Even if something is offered free, the donee must have the capacity to make use of it. It is this capacity of the people that throws a burden on the Government.

Hence, any scheme for the educational progress ofthe people must be based on a broader plane where the concerns and resources of the community have to be reckoned with.

Added to this, the latest popular clamour for emphasis on religious studies and the learning of all national languages, makes the matter more intricate.

And so the approach to the task of formulating a full scheme for the bringing up of the young aimed at the development of character and mental power, must be made with a sense of responsibility and clear understanding of civic consciousness.

## AN EPITAPH TO A TEACHER HERO

Not many of the thousands who enjoyed the influence - infectious as it was - of Mr. K. V. Mylvaganam have yet realised the significance of his passing away, though he lived in retirement outside the country.

He belonged to that band of educators at a time when teaching was not a lost tradition. He was indeed a first class teacher with his First Class English Trained Certificate of the old vintage. He came to Jaffna Hindu College in 192? and stormed the entire fabric of the school with his fluent English, more fluent Sinhalese and halting Tamil. Born in Jaffna but bred in the Hills and educated at Kingswood he brought its tradition to Jaffna where he earned his bread It was for some time a "Reign of Terror" and his weapon was English properly accented, properly punctuated, and neatly written as neatly as he was dressed.

"Buttons in buttonholes, no where else" was his watchword be it to the boys or to his teacher colleagues. In time he learnt the difference between Thirukkural' and 'Kookural' (கூக்குரல் - Commotion) with which he often confused the masterpiece of the Tamil Munivar He imbibed the National tradition of the College so much that he became an integrated personality commanding the respect of the general public and the society of teachers. The Public Library and the Jaffna stadium 'among many such institutions' owed much to his Sabours in fund raising. He was akey figure in the All Ceylon Union of Teachers and was singled out for recognition in every part of the country where the Annual Sessions were held.

Fidel Castro was right when he set his priorities straight and declared 'We need teachers' a hero or ta heroine in every classroom" 'KVM' was a hero, in deed, In the classroom he did not always spare the rod, though in later years he claimed it was for self defence. He was a surrogate parent too and with his affable ways he instilled a zest for learning among the thousands that were under his care.

In spite of the times we live in, inspiring teachers like the late K. V. Mylvaganam will never be forgotten.

N. Sabaratnam
Principal Emeritus,
Jaffna Hindu College

## EVOLUTION OF SPIRITUAL ENLIGHTEN MENT

OUR HUMBLE TRIBUTE

Conveying the cryptic message of Religious Mastersto the congregation of mankind is neither a science nor an art, but is the spontaneous sprout of spiritual understanding.

Swami Pretmananda of the Ramakrishna Misson as its revered administrator of its Sri Lankan branch for several decades, had spread the Ramakrishna Inspiration interpreting it in its real reckoning.

The Swamiji espoused the cause of religious aspirants by serving them all in monastic meekness and thus contributed convincingly to the eloquent evolution of spiritual enlightenment.

This is our humble tribute to a highly disciplined soul.

## தாயை உள்ளுக.....

2-ம் பக்கத்து வளர்ச்சி

கை அழிப்பார்கள் என்று சாஸ்திரம் கற்ற நூலாளர்கள் கூறுகின்றார்கள்.

(வளரும்)

## சீசெல்சு நாட்டில்

(முதலாம் பக்க வளர்ச்சி)

யை நீக்க மங்களகரமான பிரமோதூத 06-05-90 ஞாயிற்றுக்கிழமை காலை தூவதசி திதி உத்தர நட்சத்திரம் கூடிய நல் வேளையில் பிள்ளையார் கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. "ஞானபூமி" சஞ்சிகை ஆசிரியரும். புகழ்பூத்த பயண இலக்கியப் படைப்பாளியுமான திரு. மணியன் அவர்கள் இக் கால்கோள் விழாவிற்பங்குகொண்டு அடிக்கல் நாட்டினார்கள்.

தொழிலின் நிமித்தம் இலங்கையில் இருந்து சென்று அங்கு பணிபுரியும் சைவாபிமானிகள் பலர் அந்நாட்டு சைவ மக்களுக்கு உறுதுணையாக இருந்து ஏற்றன செய்கின்றார்கள்.

எக்கருமத்தையும் ஆரம்பிக்கும் முன் வழிபடப்படும் பெருமை பெற்றவர் பிள்ளையார். பிள்ளையார் கோவிலைத் தொடர்ந்து ஏனைய மூர்த்திகட்கும் கோவில்கள் ஆங்கு எழும் என்ற நம்பிக்கை இனி அங்கு தெரிகின்றது.

— திரு. வை. இரகுநாத முதலியா

## சைவ சமய...

(1 ஆம் பக்க வளர்ச்சி)

போற்றி வாழ்த்தினர். சைவ சமயநெறியை வாழ்க்கையில் அமைப்பவர்கள் சான்றோர் என அருள் உரை வழங்கினர்.

சிவஸ்ரீ பரமசுவாமிக்குருக்கள் ஆசியுரை நவின்றனர்.

சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் அவர்கள் சான்றோர்கள் யார், சைவச் சான்றோர்களின் தனித்துவம் என்ன என்ற விளக்கத்தைத் திருத்தொண்டர் மாக்கதை யுரைத்த சேக்கிழார் செந்தமிழ் வழியிலே அமைத்து அரிய உரை நிகழ்த்தினர்.

இந்துசாதனம் ஆசிரியர் உரை ஆற்றும் பொழுது ஆலய பரிபாலன சபையாரின் சமயப்பண்பு அன்று சைவத்தின் இரு நயனங்களான நாயன்மார் நாயகங்கள் சம்பந்த சுவாமிகளையும் அப்பர் அடியாரையும் ஒருங்கே வரவேற்ற பத்திமையை நினைவு கூரச் செய்த தெனக் கூறி மயிலங் கூடலூர், செந்தமிழ் பயிலுங் கூடல் மட்டுமல்ல சைவ இயலும் கூடும் பேரூர் எனச் சுட்டிக் காட்டிச் சித்தாந்த வித்தகர் தலைமையிலே இலக்கண வித்தகர் வாழ்த்தப் படுதல் எத்தாலும் சிறந்த நிகழ்வாமென்றனர்.

தனது தந்தையாரும் இ. நமசிவாயப் புலவரென்றும் தமது சிந்தையாளர் இலக்கண வித்தகரும் இ. நமசிவாயப் பண்டிதர் என்றும் உள்ள ஒப்புவமை உவப்பளிக்கின்றதென்றும் மயிலங் கூடலூர் செயலும் சொல்லும் கூடும் ஊராக விளங்குகின்றதென்றும் போற்றிப் புகழ்ந்தனர்.

### சைவச் சான்றோர் சங்கப் பலகை

பண்டிதர் : மு. கந்தையா
பண்டிதர் : க. சச்சிதானந்தன்
பண்டிதர் : வ. நடராசன்
பண்டிதர் : ச. பொன்னுத்துரை
பண்டிதர் : க. வீரகத்தி
பண்டிதர் : க. நாகலிங்கம்
பண்டிதர் : கு. மனோன்மணி
திரு. நம. சிவப்பிரகாசம்
வித்துவான் ச. கந்தசாமி
வித்துவான் சி. குமாரசுவாமி
வித்துவான் க. சொக்கலிங்கம்
கலாநிதி நா. சுப்பிரமணியன்
திரு ச. விநாயகமூர்த்தி
திரு க. உமாமகேஸ்வரன்
புலவர் ம. பார்வதிநாதசிவம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி, 450ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில் 1990 ம் ஸூ சித்திரைமீ 28உ (11-5-199 ) அச்சிட்டுவெளியிடப்பெற்றது.
ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.
தொலைபேசி இல: 22356

## சிவ சமயம்....!

(1ம் பக்கத்து வளர்ச்சி)

யன உற்சாகமடைகின்றன. ஆனாலோ தவறான முறையில் விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டால் உடலநிலை பாதிக்கப்படலாம். (வளரும்)

## வேத நெறி தழைத் தோங்க வியந்தரு சேவை

### குருக்களின் குருகுலத் தொண்டு

யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதல் முதற் பேராசிரியர் கலாநிதி த. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் தாம் கற்ற கலையும் பெற்ற அநுபவத் திறனும் தாரணியில் ஏனைய வேதியர்களும் அடைய வேண்டும் மென்ற பரந்த பரோபகார நோக்குடன் வேதசிவாகம திண்ணைப்பள்ளிக்கூடம் என்ற சொலத்தக்க குருகுல வகுப்புக்களை ஆரம்பித்து அன்புப் பணியாக நடத்திவருகின்றனர்.

முன் திருக்கேதீச்சரத்திலே நன்கு நிகழ்ந்த குருகுலம் அச்சுவேலி சிவாகம வித்துவ சிரோமணி குமாரசுவாமிக் குருக்கள் தலைமையாற்றிப் பல ஆண்டுகள் நிகழ்ந்தும் தொடர்ந்து நிலைபெற முடியாமற் போனது சைவமக்களின் அபிமானக் குறைவாலேயேயெனலாம்.

இப்பொழுது செந்தண்மைத் திருத்தொண்டாகச் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கல் ஆற்றும்பணி, அரியது என்று சொல்லிவிட்டுச் சைவசமயகளவாளா விடுக்காது இத் திருத்தொண்டு நிரந்தரமாக இயங்கக் குருக்கள் அவர்களுக்கு வேண்டிய வகையில் உதவ முன்வருதல் வேண்டும்

மாயவலைப்படாது மக்கள் ஆயநெறியில் வாழ வகுப்பது சமயானுட்டனம் அதற்கு வழிகாட்டும் திறனமைந்வர்கள் சிவாசாரியர்கள் அன்னாரை வாழையடி வாழையாக வளம் பெறும் தொடர்மரபாகப் பேணுவது குருகுலப் பள்ளிக்கூடங்கள் என்ற உண்மையை யாவரும் உணருதல் வேண்டும், உணர்ந்து உறுதுணையாக அமைய வேண்டும்.

## ஈழத்தில் இருந்து ஏழு அறிஞர்கள்

### பாண்டிச் சேரிக் கம்பன் விழாவிற் பங்குகொண்டனர்.

தென் இந்தியாவிலே பாண்டிச் சேரியில் நிகழ்ந்த கம்பன் விழாவில் [10, 11, 12-5-90] ஓர் அரங்கிலே துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமை வகித்து ஈழத்துக்குப் புகழ் கொணர்ந்தனர்.

கம்பன் கழகப் மணிப்பாளர் இ. ஜெயராஸ் அவர்களும் அரிய உரைகளாற்றிப் புகழை மேலும் பரப்பினர். ஈழப் பிரதிநிதிகளில் முரசொலி ஆளுநர் நாயகம் திரு ம. சிவராசா கலைப் பேரசு பொன்னுத்துரை இன்னும் சிலர் கலந்து கொண்டனர்.